செய்திக் குறிப்பு எண்.6 நாள். 2.2.2008

செய்தி வெளியீடு

முல்லை பெரியாறு அணையிலிருந்து கசிந்து வெளியேறும் தண்ணீரை அளக்க தமிழ்நாடு மற்றும் கேரள அரசுகளின் அதிகாரிகளடங்கிய கூட்டுக் கண்காணிப்புக் குழு அமைக்கலாம் என தமிழ்நாடு தெரிவித்த கருத்தை கேரள அரசு ஏற்றுக்கொண்டுள்ளது என்று கேரள அரசின் நீர்வள ஆதாரத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.என்.கே.பிரேமச்சந்திரன் அவர்கள் பத்திரிக்கைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளதாக செய்திகள் 1.2.2008 நாளிட்ட சில நாளேடுகளில் வெளியாகியுள்ளன.

இந்தக் கூற்று முற்றிலும் தவறானது மற்றும் உண்மைக்குப் புறம்பானது. எனவே, கேரள அரசின் நீர்வள ஆதாரத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.என்.கே.பிரேமச்சந்திரன் அவர்கள் பத்திரிக்கைகளுக்கு அளித்துள்ள விவரத்தை, தெளிவு படுத்த வேண்டியது தமிழக அரசின் கடமையாகிறது.

இதற்கான விளக்கம் வருமாறு :-

மாண்புமிகு பிரதம மந்திரி அவர்களின் கோரிக்கைக்கிணங்க 19.12.2007 அன்று புது தில்லியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் கேரள முதலமைச்சர் அவர்களிடையே மாண்புமிகு மத்திய நீர்வளத் துறை அமைச்சர் முன்னிலையில் ஒரு கூட்டம் நடை பெற்றது. இக்கூட்டத்தில் பெரியாறு அணையின் பாதுகாப்பு குறித்த தனது அச்சத்தை வெளியிட்ட கேரள அரசு, அணையிலிருந்து ஏற்படும் கசிவே அணையின் பாதுகாப்பு குறித்த நிலையை கணிக்க உதவும் அடிப்படை அளவீடு ஆகும் எனவும் இதுகுறித்து ஆய்வு செய்யப்பட வேண்டியது அவசியம் எனவும் குறிப்பிட்டது. கேரள அரசால் தெரிவிக்கப்பட்ட பல்வேறு கருத்துக்களுக்கு பதிலளிக்கையில் வல்லுநர்கள் தெரிவித்துள்ள கருத்தின்படி முல்லை பெரியாறு அணை மிகவும் பாதுகாப்பாக உள்ளது என தமிழக அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. எனினும் மாண்புமிகு கேரள நீர்வளத்துறை அமைச்சர், அணையிலிருந்து

ஏற்படும் கசிவினை கவனமாக கண்காணிக்க வேண்டும் என்ற தனது வாதத்தை தொடர்ந்து வலியுறுத்தினார்.

தமிழக மற்றும் கேரள மாநில பொறியாளர்கள் அல்லாமல் நடுநிலை அமைப்பான மத்திய நீர்வள குழுமத்தை கொண்டு பிற மாநிலங்களது பொறியாளர்கள் மூலம் நீர்க்கசிவு அளவீடு செய்யும் பணியை மேற்பார்வையிடலாமென தமிழக முதலமைச்சர் பரிந்துரைத்துள்ளார். இந்த பரிந்துரையை பரிசீலித்து மத்திய அரசுக்கு தெரிவிப்பதாக மாண்புமிகு கேரள முதலமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளார்.

உண்மை நிலை இவ்வாறு இருக்க தமிழக – கேரள பொறியாளர்கள் இணைந்து அணையின் கசிவு நீரை அளக்க, தமிழகம் ஒப்புக்கொண்டதாக கேரள நீர்பாசனத்துறை அமைச்சர் கூறியிருப்பது தவறானது. தமிழக அரசு இதுபோன்ற கருத்து எதையும் அன்று தெரிவிக்கவில்லை. 20.12.2007 அன்று தமிழக முதல்வர் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் 19.12.2007 அன்று நடைபெற்ற கூட்டத்தின் நிகழ்ச்சிகளை விவரமாக எழுதியுள்ளார்.

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9